# தென்றல்


ஆரம்பம் : 06.04.2008 பதிவு இலக்கம் : 361910

காற்று : 16 சுகந்தம் : 62 (சித்திரை - ஆனி) - 2024





தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை !

ஆரம்பம் : 15.01.2024

# தென்றல்
# THENDRAL

44/1, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.
தொ.பே : 077-6989597
பெக்ஸ் : 065-2227542
Email:kirupabatticaloa@yahoo.com
இணையம்:www.thendralbook.com

ஆசிரியர் / வெளியீட்டாளர்
கதிரேசபிள்ளை கிருபாகரன்

**ஆசிரியர் குழு**

கலாபூஷணம் மு. தம்பிப்பிள்ளை

கலாபூஷணம் இ. கோபாலப்பிள்ளை

திருமதி. கவிதா கிருபாகரன்

கலாபூஷணம் ஆ. அரசரெத்தினம்

செல்வி. த. செலவராணி

**ஓவியம்**

சி. புரவர்த்தினி

**ஆக்கங்களுக்கு ஆக்கியோரை பொறுப்பாளிகளாவர். (ஆ-ர்)**

## உள்ளே....

❖ “தென்றலுக்கு வயது 16”..... 02

❖ தென்றலின் தேடல்........ 03

❖ கவிதைகள்

1. எதுவோ நடக்கிறது ................. 11
2. எட்டுக் காலியும், நானும்......... 20
3. அன்னையே.......................... 24
4. பிள்ளை நிலா.......................... 29
5. இளவேனிற் காலம்................. 35

❖ சிறுகதைகள்

1. ஐயன்குடா அம்பானியும், நான்கு பிள்ளைகளும்............................ 13
2. முயலாமை.............................. 25

❖ கட்டுரைகள்

1. கிராமமும், நகரமும்................... 21
2. இன நல்லுறவின் எடுத்துக் காட்டு பிரதீப் குணசேன!................... 33

❖ நிகழ்வுகள்

1. மட்டு.கல்லடியில் சுவாமி விவேகானந்தர் சிலை திறந்து வைப்பு!......................................... 30
2. மனநலம் நூல் வெளியீடு....... 31
3. தென்றலின் வெளிநாட்டு வலம்............................................. 36

❖ நீத்தார் நினைவு............ 37

❖ புதிய வரவுகள்.............. 39

❖ வாசகர் நெஞ்சம்................ 40

# "தென்றலுக்கு வயது 16"

**"தென்றல் சஞ்சிகை"**- இன்றைய தினம் (06) தனது பதினா றாவது அகவையில் காலடி எடுத்து வைக்கிறது.

மட்டக்களப்பு மாநிலத்திலிருந்து **"தென்றல் சஞ்சிகை"**- 06.04.2008 அன்று ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து- 16 ஆண்டுக ளாக வெளிவந்து சாதனைச் சிகரத்தில் அறுபத்திரண்டாவது மலர் என்ற இலக்கை அடைந்திருக்கிறது. நாம் இவ்விலக்கை அடைய எம்மோடு துயர் மிகுந்த இலக்கியப் பயணத்தில் பயணிக்கும் எம்மேலான வாசகர்கள், எழுத்தாளர்கள், ஊடக நண்பர்கள், அனுசணையாளர்கள், கூட்டுறவுப் பணியாளர்கள், உள்ளூராட்சி மன்றங்கள் உட்பட அனைவரையும் இவ்வேளையில் எண்ணிப் பார்க்கிறோம். மனம் திறந்து பாராட்டுகிறோம்.

இலங்கையில் மாத்திரமின்றி, தமிழ் கூறும் நல்லுலகெங்கும் புகழ் பரப்பி, தமிழ் பேசும் மக்களின் கலை, கலாசார, விழுமியங்களைப் பாதுகாப்பதில் உங்கள் **"தென்றல்"**-முன்னின்று வருகின்றது.


இந்நிலையில் தமிழர் விழுமியங்களைக் கட்டிக் காப்பதிலும், வரலாற்றுத் தொடர்ச்சி அறுந்து விடாமல் பேணிக் காப்பதிலும், தமிழர்களின் உணர்ச்சி. அறிவு, எழுச்சி ஆகிய மூன்றையும் கூர்மை செய்வதிலும், உலக மாந்தராய்த் தமிழரைச் செதுக்குவதிலும் உங்கள் **"தென்றல்"**-தொடர்ந்தும் பாடுபடும்.

**என்றென்றும் அன்புடன்**
**ஆசிரியர்.**

- க.கிருபாகரன் -

# தென்றலின் தேடல்

## மகுடம் வி. மைக்கல் கொலின்



**உ**லகின் இரண்டாவது இயற்கைத் துறைமுகத்தைக் கொண்டதும் தனது அமைவிடத்தின் கேந்திர முக்கியத் துவத்தால் உலகமெங்கும் பேசப்படுவது மான, தமிழர் தலைநகராம் திருகோண மலை மண்ணை வசிப்பிடமாகவும், தனது திருமண பந்தத்தின் மூலமாக மீன்பாடும் தேன்நாடாம் மட்டக்களப்பு மண்ணை வசிப்பிடமாகவும் கொண்டு திருகோண மலை, மட்டக்களப்பு என்ற இரு மாவட்டங் களின் கலை இலக்கிய வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் காத்திரமான பங்களிப்பை ஆற்றி வருவதோடு கவிஞர், எழுத்தாளர், குறும்பட இயக்குனர், சஞ்சிகையாளர், பத்திரிகையாளர், வெளியீட்டாளர் எனப் பல பரிமாணத் தளங்களில் இயங்கி வருபவர். இயங்குதல் என்பதற்கப்பால் மேற்குறித்த தளங்களில் தனது ஆளுமையை பதித்து வருபவர். திருகோணமலை மண்ணின் முதல் புதுக்கவிதைத் தொகுப்பை வெளியிட்டவரும், திருகோணமலையில் இருந்து முதல் தொலைக்காட்சி நாடக டிப்ளோமா முடித்தவரும் அதன் நீட்சியாக **"மரபை மீறும் மானுடம்"** என்ற தலைப்பில் திருகோணமலையின் முதல் குறும்படத்தை இயக்கியவருமான மகுடம் வி. மைக்கல் கொலின் அவர்களை எமது **"தென்றலின் தேடலாக"** தருவதில் பெரு மகிழ்வும், பெருமையும் கொள்கிறோம்.

**இலங்கையின் ஆற்றல்மிக்க மூத்த படைப்பாளிகள் பலரை இன்றைய இளம் தலைமுறையினர் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர். அந்த வகையில் ஈழத்து இலக்கிய – சஞ்சிகை – நாட்டிய – நாடக – கிராமிய வைத்திய துறைக்குப் பெரும் பங்காற்றிய அத்தகைய இலக்கிய விருட்சங்களை வெளி உலகுக்கு அறிமுகம் செய்யும் வகையிலேயே “தென்றலின் தேடல்” எனும் இப்பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

## கல்வி

திருகோணமலை மண்ணின் புகழ் பூத்த கல்லூரியான புனித சூசையப்பர் கல்லூரியில் ஆரம்பக்கல்வி தொடக்கம் உயர் கல்வி வரை கற்று உயர்தரத்தில் வணிகத்துறையில் அதி விசேட சித்தி பெற்று முகாமைத்துவத் துறையில் உயர்கல்வியை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கற்று வியாபார நிர்வாக மாணி (BBA) பட்டதாரியானார். இக்காலங்களில் இவர் தொலைக்காட்சி நாடக டிப்ளோமா, தொலைத் தொடர்புத் துறையில் டிப்ளோமாக்களையும் பூர்த்தி செய்தார்.

## தொழில்

தனது பல்கலைக்கழக கல்வியை பூர்த்தி செய்தவுடன் இவர் மட்டக்களப்பு மண்ணில் இருந்து முதல் முறையாக (1998) வெளிவரத் தொடங்கிய தினக்கதிர் வாரப் பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பிலும், சந்தைப்படுத்தல் முகாமையாளராகவும் இணைந்து கொண்டார்.

தினக்கதிர் பத்திரிகையின் ஐந்தாவது இதழில் இருந்து அதன் பிரதம ஆசிரியராகவும், கிழக்கிலங்கையின் முதல் ஓவ்செட் (Offset) அச்சகமான ஈஸ்டன் கிராபிக்ஸ்சின் பொது முகாமையாளராகவும் கடமை ஏற்றார். 1998 ம் ஆண்டு நவம்பர் மாதம் திட்டமிட்டு வடகிழக்கில் ஏற்படுத்தப்பட்ட மின்சாரத்தடை காரணமாக தினக்கதிர் தொடர்ந்து வரமுடியாத நிலை.

2000 ம் ஆண்டு மீண்டும் தினக்கதிர் பத்திரிகை நாளிதழாக வெளிவரத் தொடங்கிய வேளை நாளிதழின் இணை ஆசிரியராகவும், வாரமலரின் பிரதம ஆசிரியராகவும் மீண்டும் பதவி ஏற்றார்.

2004 இல் நோர்வே(நோராட் திட்டம்) நிதிப்பங்களிப்புடன் இயங்கிய மட்டக்களப்பு மாவட்ட பொருளாதார அபிவிருத்தி திட்டத்தின் **(DERBA)** சமூக உணர்வூட்டாளராக **(Social mobilaizer)** கடமையாற்றினார். 2005 ம் ஆண்டு தொடக்கம் அரச உத்தியோகத்தில் இணைந்து தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தராகவும், மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளராகவும் கடமை ஆற்றி வருகிறார்.

## மணவாழ்க்கை

தனது பல்கலைக்கழக காலத்தில் மட்டக்களப்பைச் சேர்ந்த ஹஜேந்தினி மகேந்திரன் என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு ரொகான் ருக்சன், நிருஷான் என இரண்டு புதல்வர்கள் உள்ளனர்.

## எழுதி வெளியிட்ட நூல்கள் :

01. என் பிரிய ராஜகுமாரிக்கு (1992) புதுக்கவிதைத் தொகுப்பு
02. பரசுராம பூமி (2018) (சிறுகதைத் தொகுப்பு)
    முழுக்க முழுக்க தொன்மங்களையும் இறை நூல்களையும் மறுவாசிப்புக்குட்படுத்திய முதல் தொகுப்பு. 2019 கிழக்கு மாகாண சாகித்திய விருது பெற்றது
03. சிலுவைகளே சிறகுகளாய் ( 2019) புதுக்கவிதைத் தொகுப்பு. 2020 தேசிய சாகித்திய விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட மூன்று நூல்களில் ஒன்றாக விருது பெற்றது.

04. வீணையடி நீ எனக்கு (2020) நாவல்
முழுக்க முழுக்க கிழக்குப் பல்கலைக்கழக வாழ்வியலை முன் வைத்து வெளிவந்த முதல் நாவல். இதுவும் தேசிய சாகித்திய விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட மூன்று நாவல்களில் ஒன்று என்ற விருதையும், கொடகே சாகித்திய விருதில் முதல் மூன்று இடங்களில் தேர்வாகி சான்றிதழ், விருது பெற்றது

05. இவனைச் சிலுவையில் அறையுங்கள் (2021) (புதுக்கவிதைத் தொகுப்பு)

06. எழுதித்தீரா பிரியங்கள்(2021) புதுக்கவிதைத் தொகுப்பு

07. என் இனிய பட்டாம் பூச்சிக்கு (2022) புதுக்கவிதைத் தொகுப்பு
இலண்டன் இலக்கிய நிறுவகம், இலங்கை இலக்கிய நிறுவகம் வழங்கும் கவிதைக்கான விருது பெற்றது.

## வெளிவரவுள்ள நூல்

அன்பின் முத்தங்கள் (2024) புதுக்கவிதைத் தொகுப்பு

## எழுத்துலகப் பிரவேசம்

இவர் தனது பாடசாலை காலங்களிலேயே எழுத்துத் துறையில் ஈடுபட்டவர். 8ம் வகுப்பு படிக்கும்போது தனது வகுப்பில் **"சிறுவர் வைரம்"** என்ற கை யெழுத்துச் சஞ்சிகையை வெளிக்கொணர்ந்தார். தனது பதின்மூன்றாவது வயதில் இவர் எழுதி கிறிஸ்தவ இலக்கிய சஞ்சிகையான தொண்டனில் 1983 இல் வெளியான **"தியாகச் சுடர்"** என்ற சிறுகதையை தொடர்ந்து இவரது எழுத்து பணி தொடர்ந்தது. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த **"புதிய உலகம்"**, **"நான்"**, போன்ற சஞ்சிகைகள் தொடங்கி தேசிய பத்திரிகைகளான தினகரன், வீரகேசரி, சிந்தாமணி, ஆகிய பத்திரிகைகளிலும் புலம் பெயர்தேசங் களில் இருந்து வெளி

வந்த இதழ்களிலும் இவரது படைப்புகள் வெளிவந்தன.

## சஞ்சிகை - பத்திரிகை ஆசிரியராக

இவர் திருகோணமலையில் இருந்து 1985.ம் ஆண்டுதொடங்கிய **"தாகம்"** கலை இலக்கிய புரட்சிகர முற்போக்கு இதழ் தொடர்ச்சியாக 1995 வரை பத்து வருடங்கள் வெளிவந்தது. இதன் முதலாவது ஆண்டுமலர் வெளியீடு கொழும்பிலும், பத்தாவது ஆண்டுமலர் வெளியீடு மட்டக்களப்பிலும் நடை பெற்றது.

1986 காலப்பகுதியில் இலங்கை கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து **"நிர்வாணம்"** என்ற பெயரில் ஒரு கவிதைத் தொகுதியை வெளியிட்டார். தாகம் பதிப்பகத்தின் மூலம் இதுவரை ஆறு நூல்களை வெளிக்கொணர்ந்தார். இதில் நான்கு நூல்கள் வடகிழக்கு மாகாண சாகித்திய விருது மற்றும் இந்திய லில்லி தேவசிகாமணி விருது என்பவைகளை பெற்றுக்கொண்டன.

1992.இல் மட்டக்களப்பு வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகம் வந்த பின்னர் மட்டக்களப்பில் இருந்து **"பீனிக்ஸ்"** என்ற பெயரில் ஒரு கவிதை இதழை வெளியிட்டார். பல்கலைக்கழக தமிழ்ச்சங்க செயலாளராகவிருந்து தழல் என்ற இதழையும் கத்தோலிக்க ஒன்றிய இதழாக தூதன் என்ற இதழையும் வெளிக்கொணர்ந்தார்.

1998 இல் மட்டக்களப்பில் வெளியாகிய தினக்கதிர் வார இதழின் பிரதம ஆசிரியராகவும், மீண்டும் தினக்கதிர் 2000 ம் ஆண்டு தினசரியாக வெளிவந்த போது தினக்கதிர் நாளிதழின் இணை ஆசி

ரியராகவும் வார இதழின் பிரதம ஆசிரியராகவும் செயற்பட்டார். 2012.இல் இவர் மட்டக்களப்பிலிருந்து ஆரம்பித்த மகுடம் கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழும், மகுடம் பதிப்பகமும் மட்டக்களப்பின் அடையாளங்களாக உள்ளது.

மகுடம் பிரமிள் சிறப்பிதழ் தமிழகத்தில் மீள் பிரசுரம் செய்யப்பட்டு வெளியீட்டு விழா நடைபெற்றது. இதுவரை எந்த ஒரு ஈழத்து இதழுக்கும் கிடைக்காத கௌரவமாகும். மகுடம் பதிப்பகம் மூலம் இதுவரை 80 நூல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதில் பல நூல்கள் தேசிய, கொடகே, கிழக்குமாகாண சாகித்திய விருதையும் இலண்டன் இலக்கிய நிறுவக விருதுகளையும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. கடந்த 2000 ஆம் ஆண்டில் இருந்து சராசரியாக மாதம் ஒரு நூலை மகுடம் வெளியிடுவது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாணவர்களின் நலன் கருதி **Institute for Profess, Orals Studies (IPS)** நிறுவனத்தின் மூலம் கல்விச் சஞ்சிகையாக வெளிவந்த **“படிக்கல்“** சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகவும், மன்று நிறுவனத்தால் வெளியிடப்பட்ட **“சூழல்சுடர்”** சஞ்சிகையின் ஆசிரியர் குழு உறுப்பினராகவும், கன டாவில் இருந்து வெளிவந்த இருவார பத்திரிகையான **“ஆதவன்”** இதழின் ஆசிரியராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

கடந்த ஐந்து வருட காலமாக லண்டனில் இருந்து சிறுகதைகளுக் கான வெளி வரும் சிறுகதை மஞ்சரியின் உதவி ஆசிரியராகவும் உள்ளார்.

மகுடம் கலை இலக்கிய வட்ட பௌர்ணமி கலை இலக்கிய நிகழ்வு மூலம் இதுவரை பல நூல்களின் வெளியீடு, அறிமுகம், நினைவுப்

பேருரை என 55 நிகழ்வுகளுக்கு மேல் நடாத்தியுள்ளார். ஒரே நாளில் காலை. மாலை என இரண்டு வெவ்வேறு நிகழ்வுகளை நடாத்தி சாதனை படைத்துள்ளார். கொரோனா காலத்தில் தொடங்கப்பட்ட தட்டுங்கள். Com இணைய செய்தித் தளத்தின் ஆசிரியராகவும் இருந்துள்ளார்.

மகுடம் பதிப்பகம், தட்டுங்கள். **Com** இணைந்து நவீன தமிழ்க் கவிஞர் பிரமிள் நினைவாக கடந்த நான்கு வருடங்களாக வெளிவரும் கவிதை நூல்களில் சிறந்த நூலுக்கு பிரமிள் விருது வழங்கி வருகிறார். மகுடம் பதிப்பகமும், அனைமிகா பதிப்பகமும் இணைந்து இதுவரை நான்கு நூல்களை வெளியிட்டுள்ளன. அமரர்கள் வ. அ. இராசரத்தினம், டொமினிக் ஜீவா, நந்தினிசேவியர் ஆகியோருக்கும் கலாபூசணம் கவிஞர் கேணிப்பித் தன் அமுத விழா மலர் என நான்கு நூல்கள்.

## தொகுப்பாளராக

இவர் இதுவரை 20 க்கு மேற்பட்ட நூல்களின் தொகுப்பாளராக விருந்து வெளியிட்டுள்ளார். அனாமிகா நினைவுப்பேருரைகள் 14 இன் நூல் தொகுப்பாளராகவும், தாய் வீடு இதழின் சிறுகதைப் போட்டியில் வெற்றியீட்டிய சிறுகதைகளின் தொகுப்பான **“மயான பூமி”** என பல. மேலும் இவர் பல நூல்களின், இதழ்களின் வெளி யீட்டில் உதவியாளராகவும், தொகுப்பாளராகவுமிருந்து பல நூல்களை வெளியிட்டுள்ளார்.

## பெற்ற விருதுகளும் - பாராட்டுதல்களும்

இவர் தனது இலக்கியப் படைப்புகளுக்கு பெற்ற விருதுகளை பட்டியல்

இட இடம் போதாது. எனவே ஒரு சில விருதுகளை மட்டும் குறிப்பிடலாம்.

01. இவரது சிறுகதைத்தொகுப்பு கிழக்கு மாகாண சாகித்திய விருதினை பெற்றது (2019)
02. 2000,2022 களில் இவரது கவிதை நூல், நாவல் என்பன தேசிய சாகித்திய விருதுக்கு பல பரிந்துரைக்கப்பட்ட மூன்று நூல்களில் ஒன்றாக விருது பெற்றது. அதேபோன்றே இவரது நாவல் கொடகே சாகித்திய விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டது.
03. இலண்டன் இலக்கிய நிறுவகம், இலங்கை இலக்கிய நிறுவகம் இணைந்து கவிதை நூலுக்கு வழங்கும் கவிதை விருது 2022 இவரது கவிதை நூலுக்கு கிடைத்தது.
04. தடாகம் இலக்கிய அமைப்பு, கனடா எழுத்தாளர் சங்கம், மலேசிய எழுத்தாளர் சங்கம் இணைந்து வழங்கிய தமிழ்மணி விருது
05. அமைச்சர் மனோகணேசனின் தேசிய ஒருமைப்பாடு அரச கரும மொழிகள் சமூக மேம்பாடு மற்றும் இந்துசமய விவாகார அமைச்சு வழங்கிய **“கலைச்சுடர் விருது”**
06. திருகோணமலை எண்ணம் போல் வாழ்க்கை அமைப்பு வழங்கிய பாராட்டு விருது.

இவ்வாறாக பல்வேறு துறைகளிலும் அகலக்கால் விரித்து கடந்த 41 வருட காலமாக கலை மற்றும் இலக்கியப் பணியாற்றி வரும் **“மகுடம் வி.மைக்கல் கொலினின்”** பயணம் தொடரத் **“தென்றல்”** மனம் திறந்து வாழ்த்துகிறது.

உங்கள் “தென்றல்” சஞ்சிகையில் பிரசுரிப்பதற்கெனத் தரமான கட்டுரைகள், சிறுகதைகள் மற்றும் கவிதைகள் வரவேற்கப்படுகின்றன.
- ஆசிரியர் -

-கவிதை-

# ஏதுவோ நடக்கிறது!

-கலாபூஷணம் மருதூர் ஜமால்தீன்-

நாட்டிலெதுவோ நடக்கிறது
நாளும் மனதும் தவிக்கிறது
வீட்டில். வாழ்வோர் கவலையதால்
வினையே தொடரக் காண்கிறார்!

நீதி நேர்மை ஒழுங்கற்று
நினைப்போரனிதம் புரிகின்ற
சேதியெங்கும் நிறைகிறது
சேவை மனங்கள் குறைகிறது!

பொருட்கள் விலை மலைபோலாய்
பார்த்திருக்க உயர்கிறது
தருணம் பார்த்துச் சுரண்டுகிற
தலைகள் கரமோ விரைகிறது!

மழை வெள்ளமழிவுகளால்
மக்களவதி கண்டுமிங்கு

பிழைக்க வைக்க அரசுதனை
பிதற்று முளறல் தெரிகிறது!

ஆளும் மன்றம் சண்டைகளால்
அவதி போர்க்கோழிகளாய்
நாளும் ஒற்றுமையில்லாது
நாவால் உளறல் தொடர்கிறது!

தலைமைத் தனத்திலுயர்ந்தோரும்
தானே வளரயெண்ணுகிறார்
உலைவைத்திங்கு மக்களுக்கு
உண்மை மூடி மறைக்கின்றார்!

இனத்தில் கலகம் மூட்டுதற்கே
எங்கும் வழி சிலர் தேடுகிறார்
சினத்தால் பெற்ற அழிவுகளை
சிந்தை மறந்து நகைக்கின்றார்!

வளங்கள் சூழ்ந்தயெம்நாடு
ஏன்தானிப்படிப் போனதுவோ
உளங்கள் திருந்தி வாழுதற்கு
உறுதியெடுப்போர் யாரப்பா!

– சிறுகதை –

# ஐயன்குடா அம்பானியும் நான்கு பிள்ளைகளும்!

-சிவராசா ஹர்ஷன், திருகோணமலை-

ஓர் கிராமத்தில் சிவா காதல் திருமணம் முடித்து தன் மனைவியுடன் சந்தோசமாக வாழ்ந்து வந்தார். இவர் பிரதானமாக வயலையும் மற்றும் சாரதித் தொழிலையும் பார்த்து வருகின்றார். இவ்வாறு இவர் வாழ்க்கை சந்தோசமாக நகர்கையில் மூத்த பிள்ளையாக மகன் கிடைத்தான். இதன் பின்னர் ஆண்டுகள் இரண்டோடின. சிவாவின் இல்வாழ்க்கையும் சுமாராக போய்க் கொண்டிருக்கையில் இரண்டாவது மகன் பிறந்தான். ஊரில் ஏற்பட்ட இனங்களுக்கிடையிலான முறுகல் காரணமாக இனக்கலவரம் ஏற்பட்டது. இதனால் எல்லா சனங்களும் பாதுகாப்பான இடங்களை நோக்கிப் புறப்பட்டனர். சிவாவும் தன் மனைவியுடனும் இரண்டு குழந்தைகளுடன் தன் சொந்தக் கிராமத்தை விட்டு வேறொரு மாவட்டத்தில் ஒரு கிராமத்தைச் சென்றடைந்தான்.

அங்கு சிவாவின் வாழ்க்கை கஸ்டத்தின் மத்தியில் ஆரம்பித்தது. தொடக்கத்தில் கூலித்தொழிலாகவும் சில நேரங்களில் ரைவர் வேலைக்கும் சென்று வாழ்க்கையை கொண்டு நடாத்தினார் சிவா. கரண்ட் வசதி இல்லாததால் பூச்சி, பூரான், பாம்புகளிடம் இருந்து தப்பித்துக் கொள்ள மிகுந்த சிரமத்தை எதிர்கொண்டான். சில நேரங்களில் சங்கக்கடையில் பல்வேறு இன்னலுக்கு நடுவில் நீண்ட



நேரம் வெயிலில் கால் கடுக்க கடுக்க வரிசையில் நின்று மண் ணெண்ணை வாங்கிக் கொண்டு வந்து வீட்டில் பிள்ளைகளுக்காக அரிக்கன் லாம்பு எரிய வைத்தார். ஓரளவாக வாழ்க்கை போய்க் கொண்டிருக்கையில் சிவாவின் மூத்த மகன் பாடசாலை போகத் தொடங்கினான். பணச் சிக்கல் தொடங்கியது. சிவா மனந்தளராமல் வயலில் கூலி வேலை செய்வதற்காக பல நாட்கள் மனைவி, பிள்ளைகளைப் பிரிந்து தூர இடங்களுக்கு போய் தொழில் பார்த்து காசு உழைத்து வந்தார். அவ்வப்போது சிறு வியாபாரத் தொழிலையும் வேறு ஊர்களுக்கு போய் செய்து வந்தார்.

இருப்பவனுக்கு ஒரு வேலை இல்லாதவனுக்கு ஆயிரம் வேலை என்ற அடிப்படையில் சிவா கிடைக்கும் எல்லா வேலைகளையும் செய்து வந்தார். இவரின் நேர்மையான பண்பினால் ஊரில் அனைவரினதும் நன்மதிப்பையும் பெற்றார். சிவாவின் வாழ்க்கை இவ்வாறு போய்க்கொண்டிருக்கையில் மூன்றாவதாக அதிஷ்ட தேவதையாக பெண் குழந்தை பிறந்ததால் ஆனந்தத்திற்கு குடும்பத்தில் குறைவில்லை. மீண்டும் சரியாகக் கஸ்டப்பட்டான். சரிவர வேலை கிடைக்காததால் மிகுந்த வேதனை அடைந்தான். மனந்தளராமல் பல கஸ்டங்களுக்கு மத்தியில் வேலைகளுக்கு சென்று பணம் சிறிதள வேனும் சேர்த்தார். இப்போது வாழ்க்கையானது சந்தோசமாக

உருண்டோடியது. சிவாவின் மூத்த மகன் படிப்பில் சிறப்பாகவும் இளையவன் படிப்பு, விளையாட்டு என இரண்டிலும் சிறப்பாகவும், திறமையையும் மிளிர்ந்தான். இனப்பிரச்சனைக்கு நடுவில் சிவாவின் வாழ்க்கையானது ஊரு விட்டு ஊரு என காலம் போய்க் கொண்டிருந்தது.

ஒரு சாதரண நடுத்தர குடும்பமாக கஸ்டத்தில் வாழ்ந்து கொண்டி ருக்கையில் நான்காவதாகவும் கடைக் குட்டியாகவும் இவரின் கஸ்டங் களை இல்லாமலொழிக்க வந்த அதிஸ்டக் குழந்தையாக மகள் பிறந்தாள். இப்போது வீட்டில் அடிக்கடி சிவாவுக்கும் மனைவிக்கும் இடையே சின்ன சின்ன மனக் கசப்புகள் வந்து போயின. இனிமேல் இங்கு வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாது என சிவா நினைத்தான். தன் மனைவி குழந்தைகளுடன் சொந்த ஊருக்கு திரும்ப முடிவெடுத்தான். உரிய இடங்களில் விண்ணப்பங்களை நிரப்பி கொடுத்தான். இளைய மகளின் அதிஸ்டம் போலவே சிவாவின் சொந்த ஊருக்கு திரும்ப அனுமதி கிடைத்தது.

சிவா தனது உறவினர் ஒருவரிடம் 1500 ரூபா கடனாக வாங்கிக் கொண்டு சொந்த ஊருக்குப் புறப்பட்டுச் சென்றான். இதற்கிடையில் இவர் மனைவியை காதல் திருமணம் செய்ததால் மனைவியின் அம்மா வீட்டில் இருந்து இவர்களுடன் யாரும் எந்த தொடர்பும் இல்லை. இந்த நிலையில் மனைவியின் ஒன்றுவிட்ட சகோதரன் மற்றும் சகோதரி, பெரியம்மா போன்றவர்கள் சிவாவையும் மனைவி யையும் பிள்ளைகளையும் அரவணைத்தனர். இடம்பெயர்வு க்கு முன் ஆரம்பத்தில் சிவா கூட்டுறவுச் சங்கத்தில் பணி புரிந்துள்ளதால் அதன் மேலாளர் இவரின் நிலையறிந்து மீண்டும் அந்தப் பணியினை வழங்கி பெரும் உதவி செய்தார்.

தற்போது இன்னொரு சொந்தக்காரரின் காணியில் தற்காலிகமாக களிமண்ணினால் கட்டிய சிறியதொரு வீட்டில் குடியேறினார். இவ்வாறிருக்க இவரது குழந்தைகள் பாடசாலை, ஆரம்பப்பாடசாலை என போகத் தொடங்கினர். தற்போது சிவா கஸ்டங்களில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக மீளத்தொடங்கினார். பின்னர் நான்கு வருடங்கள் கழிந்தன. இதன்போது கூட்டுறவுச் சங்க வேலையில் இருந்து ஓய்வினை பெற்று வீட்டு வேலைகளையும் வயல் வேலைகளையும் கவனித்து வந்தார். இவ்வாறு நாட்கள் நகர்ந்தன.

இந்நிலையில் ஒரு மாரி சீசனில் பெரும்மழை, கடும் காற்று என கொட்டித் தள்ளியது. இதனால் களிமண் சுவர் கரைந்து வீழ்ந்து அந்த வீடும் பிரச்சனைக்கு உள்ளாகியது. இதன்போது அந்த ஊர் கிராம அதிகாரி சிவாவின் நிலையறிந்து, இனப்பிரச்சனையில் பாதிக்கப்பட்டி ருந்தமையாலும் அரச வீட்டுத் திட்ட உதவியோடு நிரந்தர வீடொன்றை அமைக்க வழியமைத்துக் கொடுத்ததால் ஓடு போட்ட கல் வீட்டைக் கட்டி முடித்தார். இச்சந்தர்ப்பத்தின்போது அரச திட்ட அலுவலகமொன்றி ற்கு அவசரமாக சாரதி ஒன்று தேவை என்று ஓர் உறவினர் வாயிலாக அறிந்து, மீண்டும் சாரதி பணியில் சேர்ந்தார். இந்நிலையில் மீண்டும் இனப்பிரச்சனை தலை தூக்கியது. முன்னர் இடம்பெயர்ந்தது போல் இந்த தடவை ஒரு அடி கூட நகரவில்லை. பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாழ்க்கை போய்க் கொண்டிருந் தது.

இந்நிலையில் இரண்டு மூன்று வருடங்களின் பின் தனக்கு அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்ட வீட்டினை முழுமையாகப் பூர்த்தி செய்து கொண்டு 21 வருடங்களின் பின் மனைவி மற்றும் நான்கு பிள்ளைகளுடன் தன் சொந்த வீட்டில் குடியேறினார். இப்போது சிவாவின் மூத்த மகன் பள்ளிக்கூடப் படிப்பை முடித்துக் கொண்டு

தொழிநுட்ப கல்லூரியில் பொறியியல் கற்கையுடனும், இரண்டாவது மகன் பள்ளிக்கூடத்தில் உயர்தரத்தை முடித்து வீட்டிலும், மூன்றாவது மகள் சாதாரண வகுப்பிலும், கடைக்குட்டி மகள் வகுப்பு எட்டிலும் இருந்தனர். சிவா வீட்டு வேலை, வயல் வேலை என பிஸியா இருந்தார். சிவாவின் மனைவியும் சளைத்தவள் அல்ல. தன் பங்குக்கு வீட்டில் பிள்ளைகளைப் பார்த்துக் கொள்வதோடு ஆடு, மாடு, கோழி என சிவாவின் உழைப்புக்கு உறுதுணையாக இருந்தாள். மூத்த மகன் இப்போது தொழிநுட்பக் கல்வியைப் பூர்த்தி செய்து அரச பொறியியல் திணைக்களங்களில் பயிற்சியைப் பெற்று வீதி அபிவி ருத்தித் திட்டமொன்றில் மேற்பார்வையாளராகப் பணியில் சேர்ந்தான். இரண்டாவது மகன் தற்போது தொழிநுட்பக் கல்லூரியில் கணக்கியல் கற்கையைத் தொடர்ந்தான்.

வாழ்க்கை சந்தோசமாக நகர்ந்து கொண்டிருக்கையில் சிவா தனது மனைவியின் தாய் வீட்டாருடன் கொஞ்சம் கொஞ்சமாக தொடர் புகளை ஏற்படுத்திப் பிள்ளைகளை அனுப்பி உறவினை ஏற்படுத்திக் கொண்டார். மனைவியின் தாய், தந்தையர் வயது போய் முதுமை அடைந்துள்ளதால் மட்டுமல்ல, ஊரில் கௌரவமாக வாழ்ந்தவர்கள். அவர்களது கடைசிக்காலம் சந்தோசமாக போகட்டும் என சிவா நினைத்தார் போலும். மேலும் சில மாதங்கள் உருண்டோடுகையில் முழுக் குடும்பமும் ஒன்றாக சேர்ந்தார்கள். இதன்போது மூத்தவன் தன் வேலையிலும் இரண்டாவது மகனும் ஓர் அரச திட்டத்தில் பணி புரிந்தான். மூன்றாவது மகள் உயர்தரம் சித்தியடைந்து பல்கலைக் கழகம் தெரிவானாள்.

மற்ற இளைய கடைக்குட்டி நகரப் பாடசாலையில் சாதாரண தரத்தில் கல்வியைத் தொடர்ந்தாள். இவ்வாறாக காலம் ஓடிக்கொண்டிருந்தது. சிவா வீடும், வயலுமாக திரிந்தார். இவர்களின் சொந்தங்கள் அவ்வப்போது வருவார்கள். போவார்கள்.

இதன்போது மூத்த மகனுக்கு மத்திய கிழக்கு நாடொன்றில் வேலை வாய்ப்பு கிடைத்ததால், வீட்டு நிலமையையும் நினைத்து புறப்பட்டுச் சென்றான். இதனால் சிவாவின் சின்ன சின்ன கஸ்டங்கள் எல்லாம் மறைந்தன. மற்றப் பக்கம் சிவாவின் கடைக்குட்டி மகள் உயர்தரத்தில் படிப்பைத் தொடர்ந்தாள். சில ஆண்டுகளின் பின் மூத்த மகன் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்து உள்நாட்டில் சிறு சிறு திட்டங்களில் வேலையினை தொடர்ந்தான். இளைய மகளும் பல்க லைக்கழகத்திற்கத் தெரிவானாள். சிவாவின் கையில் காசு கொஞ்சம் இறுக்கமாக இருந்தது. இந்நிலையில் மனைவியின் சகோதரி ஒருவரின் உதவியால் இளையவளின் படிப்புச் செலவு போய்க் கொண்டிருந்தது. இரண்டாவது மகன் சுயதொழில் மேற்கொண்ட போதும் பெரிதாக வருமானம் கிடைக்கவில்லை. வயலில் உதவியா கவும் சில நேரங்களில் முழுமையாகவும் வயல் வேலைகளை பார்த்தான்.

இந்த வேளையில் அரச வங்கியொன்றின் கடனுதவியுடனும் மிகுதி பணத்திற்கு மனைவியின் நகைகளை அடைவு வைத்தும் ரக்டர் ஒன்று வாங்கினார்கள். ஆரம்பத்தில் கொஞ்சம் செலவாக இருந்தாலும் போகப் போக வேலைகளை எடுத்து நல்ல நிலைக்கு வரத் தொடங்கினார்கள். மூத்த மகனுக்கு கல்யாணம் செய்து வைக்க எண்ணியபோது எல்லாம் கை கூடி வந்ததால் மிகவும் சிறப்பாக சொந்த பந்தங்களுடனும் அயலவர்களுடனும் செய்து முடித்தார்கள். மூத்தமகள் இளையமகள் இருவரும் தங்கள் பல்கலைக்கழகப் படிப்பினை மிகச் சிறப்பாக கொண்டு சென்றார்கள். இளைய மகன் சுயதொழில், வயல், தோட்டம் என பிஸியாக இருந்தான். இதன்போது இன்னொரு சந்தோசமாக மூத்த மகனுக்கு மகள் பிறந்தாள். சிவா தாத்தாவான சந்தோசத்துடன் காலங்கள் கழிந்தன. இப்போது

கொரோனா காரணமாக மீண்டும் ஒரு இக்கட்டான நிலைக்கு சிவா மற்றும் இரு மகன்களின் வேலைகளிலும் தொய்வு நிலை உருவானது. கொஞ்சம் கஸ்டப்பட்டு போனார்கள். கொரோனா முடிவுக்கு வர சிறிது காலத்தின் பின்னர் ஓரளவு நிலைக்கு வந்தார்கள். பின்னர் சிவாவின் இரு மகள்களும் பல்கலைக்கழகப் படிப்பினை முடித்து வீடு திரும்பினார்கள்.

இவ்வாறாக எல்லோரினதும் வாழ்க்கை போய்க் கொண்டிருந்தது. மூத்த மகனின் மனைவி மீண்டும் ஒருமுறை கருவுற்றாள். சிவாவின் குடும்பம் சந்தோசத்தில் திளைத்தார்கள். நாட்டில் ஏற்பட்ட பொருளாதார சீர்கேட்டினால் வெளிநாட்டு வேலைக்காக விண்ணப்பித் திருந்த நிலையில் மூத்த மகனுக்கு வாய்ப்பு கிட்டியது. தன் குடும்ப நிலையையும் பொறுப்பையும் உணர்ந்து புறப்படத் தயாரானான். சிவாவிடம் போய் **“ஐயா எனக்கு வெளியே போக விசா வந்திட்டு”** என்று கண்ணில் நீர் ததும்ப சொல்லி விட்டு அம்மாவிடம் கண்ணால் பேசி விட்டு தன் வீட்டுக்கு சென்றான். இதன்போது சிவா கமநலத் திணைக்களத்துக்குப் போகணும் வயலுக்குப் போகணும் என முணு முணுத்துக் கொண்டு முழு நிறைவோடு (மகனின் நிலையை எண்ணி சந்தோசத்தோடு) தனது ஆட்டோவில் வேகமாக விரைந்தார் வயலை நோக்கி சிவாவிடம் கோடிக்கணக்கில் பணம் இல்லாவிடிலும் தன் குடும்பம் தன் பிள்ளைகள், பேரப்பிள்ளை, தோட்டம், துரவு, கோழி, மாடு, வயல் என்று மனநிறைவில் கோடீஸ்வரனாக வாழ்ந்து வருகின் றார் ஐயன்குடா என்ற ஊரின் அம்பானியாக.

**“தென்றலின்” தொடர் வருகைக்கு தங்களால் இயன்ற பங்களிப்பை வழங்கிடுங்கள்.**

-கவிதை-

# எட்டுக்காலியும் நானும்!

-அஸ்மா பாரிஸ், மல்வானை-

எட்டுக்காலியும் நானும் ஒன்று
இருவரும் பிழைப்பது
வாய் வித்தையால்
எட்டுக்காலிக்கு எச்சில்
எனக்குப் பொய்!

இருவரும் வலை பின்னுகிறோம்
அது எச்சிலைக் கூட்டி
நான் உண்மையைக் குறைத்து!

எட்டுக்காலி வலை
ஜீவித சந்தர்ப்பம்
எனது வலை
சந்தர்ப்ப ஜீவிதம்!

எட்டுக்காலிக்குத் தெரியும்
எச்சிலின் நீளமும் ஆயுளும்
எனக்குத் தெரியும்
பொய்யின் தடுமாற்றமும் அற்புதமும்!

வாய் வித்தைக்காரர்கள்
இருவரும்
எனினும் எட்டுக்காலி
என்னைவிட, பாக்கியசாலி
சொந்த வலையில் ஒரு போதும்
சிக்குவதில்லை அது!

– கட்டுரை –

# கிராமமும் நகரமும்

-து.சிந்துஜா-

கிராமம் என்று கூறியவுடன் நம் கண்முன் வந்து நிற்பது, பச்சைப் பசேலென்ற புல்வெளிகளும், மரங்களும், சுத்தமான காற்றும்தான். பக்கத்து வீட்டிலுள்ளவர்களையும் சொந்த பந்தங்களாக நினைக்கும் ஒரே இடம் கிராமம்தான். மண் பாதையில் நண்பர்களுடன் விளை யாட்டு. சிறுவர்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து கூட்டாஞ்சோறு சமைத்தல், பம்பரம், கிட்டிப்புள்ளு, கபடி விளையாடு தல் போன்றவை யெல்லாம் கிராமத்தில் மாத்திரமே சாத்தியம். அதுமட்டுமன்றி உணவுப் பழக்கங்களை எடுத்துக் கொண்டாலும், தோட்டங்களில் விளைந்த புத்தெழுச்சியான காய்கறிகள், பழங்கள் என அனைத் துமே சக்திமிக்கவையாக இருக்கும். கையில் பணமில்லாத நிலையி லும் கூட, தோட்டங்களில் விளைந்திருக்கின்ற காய்கறிகளை உட் கொண்டு வாழலாம்.

கிராமத்தவர்களிடம் ஒருவித ஒற்றுமை எப்போதுமே காணப்படும். திண்ணையில் அமர்ந்து எல்லோரும் உரையாடுதல், ஒருவரின் சுகதுக்கங்களில் இன்னொருவர் பங்கெடுத்தல் போன்ற பழக்க வழக்கங்கள் கிராமத்தவர்களிடமே பரவிக் காணப்படுகின்றன. உடை அணிவதிலும், பாரம்பரியத்தைப் பின்பற்றுவது பெரும்பாலும் கிராமத்தில் வசிப்பவர்களே என்றுதான் கூற வேண்டும். தனக்கு உறவே இல்லாதவர்களைக் கூட, **“உறவுமுறை”**- சொல்லி அழைக்கும் பழக்கம் கிராமத்தவர்களிடம் மட்டுமே உள்ளது.

பக்கத்து வீட்டுக் காரரையும் பந்தமாக நினைக்கும் மனம். அது கிராமங்களில் சொகுசு வாழ்க்கையோ, வசதிகளோ இல்லாத போதும் நிம்மதியான, சுகாதாரமான வாழ்க்கை வாழலாம்.

வீட்டுக்கு வீடு பசு, ஆடு, கோழி வளர்ப்பு என செல்வச் செழிப்புடன் காணப்படுவது கிராமம். அவ்வாறே நகர வாழ்க்கையை எடுத்துக் கொண்டால், எங்கு பார்த்தாலும் பரபரப்பான சூழ்நிலை.. புழுதியும், தூசு துணிக்கைகளும்.. எந்நேரமும் இயந்திர வாழ்க்கைதான். சுத்தமான காற்றைச் சுவாசிக்கக் கூடிய வாய்ப்பு மிக மிகக் குறைவு. அடுக்கு மாடிக் குடியிருப்புக்களில் வசிப்பவர்கள் பூட்டிய கதவைத் திறப்பதேயில்லை. அந்தளவுக்கு ஒருவருக்கு ஒருவர் தொடர்பற்ற நிலையாகிப் போய் விட்டது. பக்கத்து வீட்டில் இருப்பவர்கள் என்ன நிலைமையில் இருக்கிறார்கள் என்பது கூட, சிலருக்குத் தெரிவ தில்லை. இதுதான் நகரத்து வாழ்க்கை.

வீட்டில் தொடங்கி, அனைத்துக்குமே பணம்தான் முக்கிய தேவையாக இருக்கின்றது. வீட்டு வாடகை, மின்சாரக் கட்டணம் என எல்லா வற்றுக்கும் பணம்தான் நகர வாழ்க்கையில் அடங்குகின்றன. அது மாத்திரமின்றி, உடை அணிவதில் நாகரீக வளர்ச்சி கண்டு விட்டதன் காரணமாக நவீனமாக மாறி விட்டது.

நகரவாழ் மக்களின் பாரிய பிரச்சினை இடப் பற்றாக்குறைதான். ஒருவர் தூக்கி எறியும் குப்பை இன்னொருவர் வீட்டு வாசலில் போய் விழுகின்றது. தன் வீடு, தன் வாசல் என்று தனக்கானவற்றை மட்டுமே தக்க வைத்துக் கொள்ளப் பார்க்கின்றனர். இன்னும் சொல்லப் போனால், சொந்தங்களையே பக்கத்து வீட்டுக்காரர் போல் பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். நகரத்தில் வசிப்பவர்கள் என்ன தான்

சொகுசாக வாழ்ந்தாலும் நிம்மதியான, சுகாதாரமான வாழ்க்கை வாழ்கின்றார்களா? எனக் கேட்டால் சந்தேகம்தான்.

வீட்டில் ஒரு செல்லப் பிராணியை வளர்க்க வேண்டுமானால் கூட, பக்கத்து வீட்டுக்காரரின் பல இடையூறுகளுக்கு முகங் கொடுக்க வேண்டியுள்ளது. உதாரணத்துக்கு– நாய் வளர்க்கப்படும் வீட்டில் இரவு அதிக சத்தத்துடன் நாய் குரைத்து விட்டால் போதும்.. அங்கே சண்டை ஆரம்பமாகி விடும்.

என்னதான் நகர வாழ்க்கை சொகுசானதாக இருந்தாலும், அதிக வசதியுடன் காணப்பட்டாலும் கிராமத்து வாழ்க்கையைப் போல் இன்பமும், நிம்மதியும் இருக்கின்றதா? என்பது சந்தேகமே. இன்றைக்கு நகரத்தில் வசிக்கும் பல சிறுவர்களுக்கு கிராமத்து வாழ்க்கையில் காணும் சுகம் கிடைப்பதில்லை.

**அன்பார்ந்த எழுத்தாளர்களே, கவிஞர்களே, ஊடகவியலாளர்களே "தென்றலின் தேடலில்" பிரசுரிப்பதற்காக தங்களின் முழுமையான விபரங்கள் மற்றும் புகைப் படங்களை அனுப்பி உதவுங்கள். விபரங்கள் 05 பக்கங்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.**

**- ஆசிரியர் -**

-கவிதை-

# அன்னையே!

-ஏ.அமானுல்லாஹ், புத்தளம்-

அன்னையே!
துன்பத்திலும் துயரத்திலும்
வறுமையிலும் மிதிபட்டு
மிதிபட்டு துவண்டு போகும்
என்னை நிமிர்ந்து நிற்க
வைக்கும் நீ ஓர் அதிசயம்!

சோகங்கள் துயரங்கள்
கலக்கங்களால் உன் நெஞ்சம்
சரிந்திடவில்லை நம்பிக்கையை
இழந்திடவுமில்லை பொறுமைக்கு
இலக்கணமானவள் உன்னிடமிருந்து
அறிய வேண்டியவை
பல........ பல....... பல.........!

எந்தையின் எழுத்தெல்லாம்
உன் முத்துக்கள்
உன் விழி கொட்டும் நீர் தேன்துளி
என் எழுத்து கவியெல்லாம்
உன் தாய்மொழி!

வான் தொடும் துன்பங்கள் துயரங்கள்
வந்தாலும் விழித்துவிடு மகனே என்றாய்
ஒழித்துவிடு கவலைகளை என்றாயே
அச்சம் விலக்கு என்றாய்
துணிவான செயல்களை ஆற்று என்றாய்
நீ சொன்ன வாக்கு
எனக்கு அமுத வாக்கம்மா!

–சிறுகதை–

# முயலாமை!

**சுந்தரமதி வேதநாயகம்,**
**pre school Diploma B.A/MA-**


முயல் ஒன்று ஆற்றங்கரை ஓரமாக அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டு நின்றது.

முயலை அவதானித்துக் கொண்டிருந்த கிளி **"முயலண்ணா, என்ன பலமான யோசனை? எங்கே போகப் போறீங்க..?"**–எனக் கேட்டது. **"அக்கரைக்குச் செல்ல வேண்டும். ஏதாவது வழி உள்ளதா? என்று தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். வெகு நேரமாகி விட்டது. அம்மா என்னைத் தேடிக் கொண்டிருப் பார்"**– எனக் கவலையுடன் கூறியது.

அதோ! ஆமை நண்பர் வருகிறார். அவரிடம் உதவி கேட்டுப் பாருங்கள். முயலும் கிளியும் சத்தம் போட்டு ஆமையை அழைத்தன. ஆமை விரைவாகக் கரைக்கு வந்தது. இருவர் முகத்தையும் கேள்விக் குறியோடு பார்த்தது. கிளி ஆமையிடம் **"நண்பா, முயலண்ணா மறுகரைக்குச் செல்ல வேண்டுமாம். உன்னால் உதவ முடியுமா?"**– என்று கேட்டது. ஆமை சற்று யோசித்து விட்டு, **"சரி"**– எனச் சம்மதம் தெரிவித்தது.

ஆமை முயலைப் பார்த்து, **"கவலை வேண்டாம் நண்பரே! வா, வந்து என் முதுகில் ஏறிக் கொள். மறுகரைக்குக் கொண்டு போய் விடுகிறேன்"** – என்று அன்புடன் அழைத்தது.

கிளியிடம் விடை பெற்றுக் கொண்ட முயல், ஆமையின் முதுகில் ஏறி அமர்ந்து கொண்டது.



ஆமை நேராக மறுகரைக்குச் செல்லாமல், ஆறு ஓடும் திசையில் செல்வதைக் கண்ட முயல், **“நண்பா, ஏன் நேராகச் செல்லாமல் சுற்றிச் செல்கிறாயே?”**- என வினாவியது. **“காரணமாகத்தான் போகிறேன். பேசாமல் வா!”**- என்று கூறி, ஆமை பயணத்தைத் தொடர்ந்தது.

முயல் சற்றும் எதிர்பாராத வேளையில், நீர் குறைவாக இருந்த இடத்தைப் பார்த்து முயலைக் கீழே தள்ளி விட்டு, முன்னே நீந்திச் சென்றது.

முயல் பயத்துடன் **“ஐ!. ய்!.. யோ! நண்பா இப்படி நம்பிக்கைத் துரோகம் செய்யலாமா? என்னைத் தயவு செய்து காப் பாற்று”**- என அலறியது.

ஆமை சற்று தூரம் நீந்திச் சென்று, **“பயப்படாமல் வா! வந்து என் முதுகில் ஏறிக் கொள்!”**- என்று அழைத்தது.

முயல் அருகே நீந்தி வந்ததும், சற்று முன்னால் சென்ற ஆமை, **“நீர் மிகவும் குறைவாக உள்ளது. நீந்தி- பாய்ந்து வா”**- என்றது.

முயல் அருகில் ஒரு பாறை தெரிவதைக் கண்டு, அதில் ஏறி அமர்ந்து கொண்டு **“என்னைக் காப்பாற்று”**- எனக் கூறி அழுதது.

**“பயப்படாதே நண்பா! இன்னும் நாலு பாய்ச்சல் பாய்ந்தால் கரையை அடைந்து விடுவாய். முயன்று பார்! முயற்சியே வெற்றி. முயலாமை யே தோல்வி”**- என்றது.

**“என்னால் முடியும் என்பதை முதலில் நம்பு. முயற்சி செய். முயற்சி செய்து பார்”**– என ஊக்கப்படுத்தியது.

முயல் கண்களை மூடி தன் தாயை நினைத்துக் கொண்டு, தாவிப் பாய்ந்து கரையை அடைந்தது. கரையை அடைந்ததும், முயல் மகிழ்ச்சியில் துள்ளிக் குதிப்பதைக் கண்ட ஆமை ஆனந்தம் அடைந்தது.

முயல் ஆமையைப் பார்த்து, **“கேட்க மறந்து விட்டேன். நீ எங்கே போய்க் கொண்டிருந்தாய்”**- என வினாவியது.

**“பசியாக உள்ளது. உணவு தேடிச் சென்று கொண்டிருந்தேன்”**- என்றது ஆமை.

**“என்னுடன் வா! அம்மா நிறைய உணவு வைத்திருக்கிறார். பசியாறிச் செல்”**– என அன்புடன் முயல் அழைத்தது.

தன் மகனைக் காணாது தேடிக் கொண்டிருந்த தாய் முயல், தொலைவில் மகன் வருவதைக் கண்டு கொண்டது. தன் மகனைக் கண்டதும், ஆனந்தத்தில் அழுத தாயிடம் தாவிச் சென்று நடந்தவற்றைக் கூறியது முயல். ஆமைக்கு நன்றி கூறிய தாய் முயல், ஆமையை வரவேற்று அமரச் செய்தது.

தாய் முயல் விதவிதமான உணவு வகைகளைக் கொடுத்து உபசரித்தது. பசியுடனிருந்த ஆமையும், தன் நண்பனுடன் சேர்ந்து வயிறார உண்டு மகிழ்ந்தது.

தன் பசியைப் போக்கிய தாய் முயலுக்கு நன்றி தெரிவித்து விடை பெற்றது ஆமை. தாய் முயலிடம் விடை பெற்றுக் கொண்ட முயல், ஆமையை வழியனுப்பச் சென்றது.

இருவரும் உரையாடியபடி ஆற்றங்கரைக்குச் செல்லும் போது **“நண்பா! ஏன் என்னை ஆற்றில் தள்ளி விட்டாய்”**– என முயல் கேட்டது.

**“தன்னம்பிக்கையுடன் முயன்றால் எதையும் சாதிக்கலாம் என்பதை என்றும் நினைவில் வைத்துக் கொள் நண்பா!”**

**"பிறரின் உதவி எந்நாளும் கிடைக்கும் என்பதை நம்பாதே!"**
**"நீர் குறைவாக உள்ள இடத்தை இவ்வளவு நாளும் நீ அறிந்திருக்கவில்லை. இப்போது அறிந்து கொண்டிருப்பாய்"**- என்றது ஆமை.
விடை பெற்ற ஆமையிடம் நண்பா உன்னுடன் நானும் மறுகரைக்கு வரப் போகிறேன். உன் முதுகில் ஏறி வராமல், நானே முயன்று இந்த ஆற்றை கடந்து பார்க்கப் போகிறேன்.
முயல் முன்னே பாய்ந்தது. நீந்தியும் ஆற்றைக் கடந்து செல்வதை மகிழ்வுடன் பார்த்துக் கொண்டே பின்னால் நீந்தி வந்த ஆமை, இப்போது உணர்ந்து கொண்டாயா? முயன்றால் முடியாதது எதுவுமி ல்லை. மகிழ்வுடன் கூறியது ஆமை.
முயல் ஆமைக்கு முத்தம் கொடுத்து நன்றி கூறி விடை பெற்றுக் கொண்டது. **"தனியாக போக முடியுமா?"**- என முயல் கேட்டது.
**"என்னால் இப்போது தனி யாக மறுகரையை அடைய முடியும். முயலாமைதான் பயத்திற்குக் காரணம். ஆனால், இன்று முயலுடன் சேர்ந்த ஆமையின் நட்பால் தைரியம் வந்து விட்டது"**- என்று மகிழ்வுடன் கூறிய முயல் ஆமைக்கு நன்றி தெரிவித்து விடை பெற்றுக் கொண்டது.
முயல் விடை கொடுத்து அனுப்பியது.
ஆமை மறுகரையில் நின்றவாறு தாவி, நீந்திக் குளித்துச் செல்லும் முயலை ஓர் மனநிறைவுடன் பார்த்துக் கொண்டு நின்றது.
சிறிது காலம் சென்றதும் முயலும், ஆமையும் நல்ல நண்பர்களாகி விட்டனர்.
காட்டைச் சுற்றிப் பார்த்து மகிழ்ந்தனர். நெடுநாட்களாக ஆமையும், முயலும் நல்ல நண்பர்களாக வாழ்ந்து வந்தன.
ஆமையின் நட்பு கிடைத்ததால் முயல் மகிழ்ச்சி கொண்டது.
முயலாமை மறைந்தது.
முயல், ஆமை மகிழ்ந்தது.

-கவிதை-

# பிள்ளை நிலா!

-கவிஞர் க.ரெட்ணையா, கன்னன்குடா-

பிள்ளைகளே பிள்ளைகளே
பூப்போன்ற பிள்ளைகளே
வெள்ளையுள்ளம் தான் படைத்து
விளையாடும் பிள்ளைகளே!
வண்ண வண்ண மலர்களே
வண்ணத்துப் பூச்சிகளே
மண்ணில் வந்து நடை பயிலும்
மாணிக்க தேர்களே!
வாசனை செண்டுகளே
வாசல் வரும் பொன் வண்டுகளே
பாசத்தைப் பொழிந்து
பால் முத்தம் தரும் முல்லைகளே!
கல் மனதைக் கரைத்திடும்
கரும்புச் சாறிதுவோ
மெல்ல மெல்லக் கைவீசி வரும்
மேகரத மின்விளக்கோ!
கள்ளங் களவில்லாத
கங்கைமலர் தாமரையோ
எள்ளளவும் கலக்கமில்லா
இறைவன் தந்த செல்வங்களே!
சித்திரையில் பட்டாடை அணிந்து
சிங்காரமாய் நடை பயிலும்
சித்திரம் போல் சிரித்து வந்து
சிந்தை கவரும் பிள்ளைகளே!

# "மட்டு. கல்லடியில் சுவாமி விவேகானந்தர் சிலை திறந்து வைப்பு"



இராமகிருஸ்ணமிஷனால் கல்லடிப் பாலத்தடியில் புதிதாக நிர்மானிக்கப்பட்ட பீடம் அடங்கலாக 25.05 அடி நீளமான சுவாமி விவேகானந்தரின் திருவுருவச் சிலை கொழும்பு ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தா ஜீ மகராஜினால் 31.03.2024 அன்று திரை நீக்கம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து சுவாமிஜீயினால் ஆரார்த்தி காட்டப்பட்டு, மலர ஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன் மற்றும் கோவிந்தன் கருணாகரம், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார், முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்களான திருமதி கலாமதி பத்மராஜா மற்றும் கணபதிப்பிள்ளை கருணாகரன், முன்னாள் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், மண்முனை- வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசு தேவன், மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் விநாயகமூர்த்தி றஞ்சிதமூர்த்தி, மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தினர், ஊடகவியலா ளர்கள், எழுத்தாளர்கள், கலை இலக்கிய வாதிகள், ஆன்மீகத் துறவிகள், இல்ல மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சுவாமி விவேகானந்தரின் திருவுருவச் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

இதன்போது சுவாமி விவேகானந்தரின் வேடம் தாங்கிய சிவானந்தா வித்தியாலய மாணவரொருவர் உரைநிகழ்த்தியமை குறிப்பிடத் தக்கது.

# மட்டக்களப்பு தொழில்சார் உளநல உதவி நிலையம் நடாத்திய சுப்பிரமணியம் லோகநாதன் எழுதிய “மனநலம்” நூல் வெளியீடு!

-திருமதி கவிதா கிருபாகரன்-

மட்டக்களப்பு தொழில்சார் உளநல உதவி நிலையம் நடாத்திய சுப்பிரமணியம் லோகநாதன் எழுதிய **“மனநலம்”** நூல் வெளியீடு 09/3/2024 அன்று மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு தொழில்சார் உளநல உதவி நிலைய ஸ்தாபகர் அருட்பணி போல் சற்குணநாயகம் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், முதன்மை விருந்தினர்களாக கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் பேராசிரியர் பாரதி புளோரன்ஸ் கெனடி மற்றும் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவண முத்து நவநீதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது தமிழர்களின் பாரம்பரியத்தை வெளிக்கொணரும் வகையில் மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது.

நிகழ்வில் ஆசியுரையையும், பிரார்த்தனையையும் இணைத்ததாக தொழில்சார் உளநல உதவி நிலையப் பணிப்பாளர் அருட்பணி ஜீவராஜ் நிகழ்த்த, வரவேற்பு நடனத்தை நிருத்திய கலாலயாவின்




மாணவி வழங்க, வரவேற்புரையினை தொழில்சார் உளநல உதவி நிலைய அபிவிருத்தி மற்றும் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் ஐ.ஜே.சில்வெஸ்டரும், நூலாசிரியர் சுப்பிரமணியம் லோகநாதன் லண்டனிலிருந்து நிகழ்நிலையூடாக நூலாசிரியர் உரையினையும் நிகழ்த்தினர்.

மட்டக்களப்பு தொழில்சார் உளநல உதவி நிலையப் பணிப்பாளர் அருட்பணி ஜீவராஜ் நூலின் முதன்மைப் பிரதிகளை நிகழ்வின் முதன்மை அதிதிகள் மற்றும் பிரமுகர்களுக்கு வழங்கி வைத்தார்.

நிகழ்வின் சிறப்புரையினை **“உளநலம் ஒரு சமூகப் பார்வை”** எனும் தலைப்பில் மகுடம் வி.மைக்கல் கொலினும், நூல் நயவுரை யினை மட்டக்களப்பு கல்வி வலய முறைசாரா உதவிக் கல்விப் பணிப்பாளர் முருகு. தயானந்தாவும், நூல் ஆய்வுரையினை ஜே.ஐ.எஸ்.ஏ பணிப்பாளர் அருட்பணி எஸ்.பெனியும், ஏற்புரையினை மட்டக்களப்பு கல்வி வலய தொழில் வழிகாட்டல் ஆலோசகர் அ.ஜெயநாதனும் ஆற்றினர்.

இந்நிலையில் தொழில்சார் உளநல உதவி நிலைய நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் திருமதி தர்சிக்கா ஜெயதினேஸின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

எனது நினைவில் – 01

# இன நல்லுறவின் எடுத்துக்காட்டு பிரதீப் குணசேன!

-ஏ.பீர்முகம்மது-



இந்தியத் தலைநகர் புதுடில்லியில் 2019 அக்டோபர் 19, 20, 21 ஆகிய மூன்று தினங்கள் தென்னாசிய நாடுகளின் இலக்கியப் பெருவிழா நடைபெற்றது.

இவ்விழாவினை சார்க் நாடுகளுக்கான எழுத்தாளர்கள் மற்றும் இலக்கியத்துக்கான அமைப்பு **(FOSWAL)** ஏற்பாடு செய்திருந்தது.

சார்க் அமைப்பின் உறுப்புநாடு என்ற வகையில் இலங்கையில் இருந்து 19 பேர் கொண்ட தூதுக்குழு கலந்து கொண்டிருந்தது. முஸ்லிம்கள் சார்பில் நான் பங்குபற்றினேன். ஒரு பெண்மணி உட்பட நான்கு பேர் தமிழர்கள் சார்பில் பங்குபற்றினர்

எம்.எச்.பிரதீப் குணசேன எனக்கு அங்குதான் அறிமுகமானார். அவர் ஒரு இனிய மனிதர். ஐம்பத்து மூன்று வயது. அமைதியான சுபாவம். கொழும்பு பல்கலைக்கழகத்தில் வருகைதரு போதனாசிரியராகவும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் வருகைதரு விரிவுரையாளராகவும் கடமையாற்றியவர். தற்போது பௌத்த பாளி பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளர். அங்கு ஆங்கில மொழி கற்பித்தலுக்கான திணைக்களத்தின் தலைமைப் பதவியை வகிக்கிறார்.

பாடசாலைகளில் ஆங்கில மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பது தொடர்பிலான பிரயோக மொழி ஆய்வுச் செயற்பாடுகளுக்கு

முன்னுரிமை அளித்து இயங்குபவர். மொழி பெயர்ப்பு நுட்பங்கள் பற்றி மிக்க ஈடுபாடு கொண்டவர்.

இன மத வேறுபாடுகளின்றி பழகும் சுபாவம் அவருக்கிருந்தது. புதுடில்லி ஹோட்டலில் தங்கிய முதல் நாளே அவருடன் பழக வேண்டுமென்ற ஈர்ப்பு எனக்கிருந்தது. நாங்கள் இருவரும் இடைவேளைகளிலும் உணவு வேளைகளிலும் மகிழ்ச்சியினைப் பரிமாறிக் கொண்டோம். மகாநாட்டின் இரண்டாம் நாள் மதியபோசனத்துக்கு முன்னர் அவர் கவிதை வாசிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

சிறுவர் இலக்கியத்துக்கும் சர்வதேச இலக்கியத்துக்குமான விருது - 2018 பெற்ற இலங்கையைச் சேர்ந்த சுனில் சரத் பெரேரா என்பவர் தலைமை தாங்கினார். நண்பர் பிரதீப் அதில் கவிதை வாசிக்கப் போகிறார் என்பதை அறிந்து கொண்ட நான் முன்கூட்டியே முன் வரிசை ஆசனத்தில் ஆவலோடு அமர்ந்து கொண்டேன்.

நான் எதிர்பார்த்தவாறே மேடையில் தன் புலமையை அவர் நிறுவினார். சந்தேகமின்றி அவர் ஒரு இலக்கிய ஆளுமையே. நிகழ்வின் முடிவில் பலரும் அவரைப் பாராட்டியபோது நானும் அவர்களுடன் எனது மகிழ்ச்சியை அவருக்குத் தெரிவித்தேன்.

இலக்கியப் பெருவிழா நடைபெற்று நான்கு வருடங்கள் கழிந்த நிலையிலும் எங்களுக்கிடையிலான நட்பு தொடர்கிறது. **“எல்லாம் வல்ல அல்லாஹ் உங்களை நன்முறையில் வழி நடாத்தப் பிரார்த்திக்கிறேன்”** என்று ஒரு தடவை என்னைப் பற்றி எழுதினார். அவரின் பிரார்த்தனையில் பின்னணியில் நான் மகிழ்ச்சியடைத்தேன் என்பதற்கும் அப்பால் இன, மத வேறுபாடுகள் இல்லாத அவரின் தெளிவான மனதை அப்போதும் கண்டு கொண்டேன்.

–கவிதை–

# இளவேனிற்காலம்...!

ஜெ. தமிழரசி -

சில்லிடும் தென்றலால்
சொல்லிடுவேன் கவித்துளி
மலர்கள் விரிந்து வரவேற்கும்
மனமும் மகிழ்ந்து கவிபாடும்...!
வசந்தகால வரவிற்காக
பச்சைப் பசேலெனும் புற்கள்
பாதையெல்லாம் பரவி
இன்முகம் காட்டுகின்றதே....!
தென்றல் மெல்லத்
தவழ்ந்து வர
மரங்கள் தலையசைத்து
இன்புற்று மகிழ்கின்றதே....!
இறைவன் எமக்களித்த
அருங்கொடைகள் யாவும்
எந்தன் உள்ளத்தை
இயற்கையிடம் ஈர்க்கின்றதே....!
வண்ண வண்ணப் பூக்களின்
கொள்ளை அழகைக்
காண்கையில் மனமும்
பரவசமாகிப் போகின்றதே....!
கண்ணுக்கு விருந்தாய்
காட்சிகள் அளிக்கும்
இயற்கை எமக்கு எத்தனை
சித்திரம் படைத்திருக்கு....!
வாழ்வினைச் சலிக்கின்ற
மண்ணின் உறவுகளே
வானத்தைப் பூமியை
பூக்களைக் காதல் செய்வீர்....!

# "தென்றலின்" வெளிநாட்டு வலம்!





**இங்கிலாந்து லிவர்பூல் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் 12 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு 25.03.2024 அன்று காலை அம்பாளுக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெற்று மதியம் பூசைகள் இடம்பெற்றது. மாலை சிவபெருமான் பார்வதி திருக்கல்யாணம் நடைபெற்று, சுவாமி வீதிவலம் வந்து இனிதே நிறைவுபெற்றது.**

**ஹிர்சி – லிவர்பூல்**

-நீத்தார் நினைவு-

# சவால்களை வென்று சாதனை படைத்த நாகராசா சிவலிங்கேஸ்வரன்!

-பழுவூரான்-



ஈஸ்வரன் என எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் சிவலிங்கேஸ்வரனின் இழப்பை ஈடு செய்ய முடியாது. அந்த வகையில் அவர் தனது காலத்தின் பெரும் பகுதியை விபுலானந்தா தனியார் கல்வி நிலையத்தின் நிருவாகியாகவே கழித்தார்.

தனது ஆசிரியப் பணியை 31 ஆண்டுகள் நிறைவேற்றி, மனநிறைவோடு ஓய்வு பெற்றிருந்தார். க.பொ.த (உயர்தர) மாணவர்களுக்கு இந்து நாகரீகப் பாடத்தைப் போதித்து பல மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு வழியைத் திறந்திருந்தார். அதனை விடப் பாடசாலைகளில் நாட்டுக் கூத்தினை அறிமுகம் செய்ததோடு மட்டுமல்லாமல், கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம், தேசியம் எனப் பல மட்டங்கள் தாண்டி மாணவர்கள் வெற்றிவாகை சூடுவதற்கு பல தடவைகள் வழிசமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பல பிரபல்யமான பாடசாலைகளைப் போட்டிகளில் வீழ்த்தி, தனது மாணவர்களுக்கு நாட்டுக் கூத்தில் மாகாணத்தில் முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொடுப்பதில் ஆழமான பணிகளை ஆற்றியுள்ளார்.

இவர் கற்பித்த பாடசாலைகளான செங்கலடி மத்திய கல்லூரி, வந்தாறுமூலை விஷ்ணு வித்தியாலயம் மற்றும் மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரிகளில் தமிழ் மொழித் தினப் போட்டிகளில் நாட்டுக் கூத்தினை மாணவர்களுக்கு விருப்பத்துக்குரியதாகப் பழக்கி வெற்றிவாகை சூடியமை இதற்கான சான்றாகும்.

இவ்வாறாக கல்வி, கலை, பண்பாடு எனப் பல்துறைகளிலும் அகலக்கால் பதித்து சாதனைகள் பல புரிந்திட்ட ஈஸ்வரனுக்குத் **“தென்றல்”**- தனது ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள் கிறது.

**தென்றல் சரித்திர சாதனை படைக்க உதவிய**

**அனைவருக்கும் நன்றிகள்.**

**– ஆசிரியர் –**

**மட்டக்களப்பு கல்லடியிலிருந்து செய்திகளை**


**நடுநிலையாக வெளிக் கொணரும்**

**“battimedia.lk” யுடன் இணைந்திருங்கள்.**

**(ஆசிரியர்)**

# புதிய வரவு

**நூல்** :- **"நான்காம் பாலினம்" (சிறுகதை)**
**ஆசிரியர்** : **கவிஞர் ஆ.மு.சி.வேலழகன்**
**வெளியீடு** :- **மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கம்**
**விலை** :- **450/-**




**இ**ந்நூலில் ஆண், பெண், திருநங்கை என்பதனை மூன்று பாலினங்களாக அறிந்த நாம் நான்காம் பாலினத்துக்குள் அடங்குபவை யாதென ஆர்வங் கொண்டு தேடுகையில் அது ஊனமுற்றோரும், முதியோரும், அநாதைகளும் என நூலாசிரியர் வெளிக்கொணர்ந்திருப்பது அனைவரையும் சிந்திக்கத் தூண்டும் விடயமாகும்.

கடந்தகாலப் போர் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்தை யும், அவர்களுக்கு ஆலோசகராய் மற்றும் வழிகாட்டியாக விளங்கிய கிறிஸ்தவப் பாதரையும் முக்கிய பாத்திரப் படைப்புக்களா கக் இச்சிறுக தை கொண்டமைந்துள்ளது. அத்தோடு கரைகாண முடியாத கடலாய் விளங்கும் மெய்யியல் கூறுகளின் தத்துவங்களையெல்லாம் தொட் டுச் செல்வதானது நூலாசிரியரை ஒரு முதிர்ந்த தத்துவ ஞானியா கவே காட்டி நிற்கின்றது.

இவ்வாறான நிலையில் இலக்கிய தாகமும், சமூக அக்கறையும் கொண்ட ஆ.மு.சி.வேலழகன் இவ்வையகம் உள்ளவரை வாழ்ந்து கொண்டே இருப்பார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

# வாசகர் நெஞ்சம்

தமிழ் கூறும் நல்லுலகில் தடம் பதிக்கும் **"தென்றல்"**

சிந்தையைக் கவரும் **"தென்றலின்"**- (தை- பங்குனி)-2024 இதழ் கிடைக்கப் பெற்று வாசித்து முடித்தேன். ஆசிரியர் பக்கம் முதல் வாசகர் பக்கம் வரை வாசகரைக் கவரும் ஈர்ப்பு சக்தியிருந்தது. இதுதான் ஓர் இதழுக்கு முக்கியமானது வாழ்த்துக்கள்.

அதிதிப் பக்கத்தில் ஏ.பீர்முகம்மது பற்றி இதுவரை அறிந்திராத வகையில் பல்வேறு விடயங்களை அறிய முடிந்தது. இவர் பன்முகத் தன்மையும், ஆளுமையும் உடையவர். இவரைப் பற்றி அறியத் தந்தமைக்கு ஆசிரியருக்குப் பாராட்டுக்கள்!

இதேபோன்று சிறுகதைகள், கவிதைகள், புதிய வரவு, நீத்தார் நினைவு, **"தென்றலின்"**- 60 ஆவது மலர் வெளியீட்டுத் தகவல்கள் மற்றும் புகைப் படங்கள் என்பவை நிகழ்வில் கலந்து கொள்ளவில்லையே என்ற ஆதங்கத்தை என் உள்ளமதில் ஏற்படுத்தியது.

இந்நிலையில் சஞ்சிகைகள் வந்த இடம் தெரியாது மடிந்து விடும் நிலையில் உனது வரவு சஞ்சிகைத் துறையில் புதுப் புரட்சியே!

உனது பணி தொடரட்டும்! எதிர்காலத்தில் 75 ஆவது இதழ் சிறப்புடன் அகிலத்தில் வலம் வர எனது நல்வாழ்த்துக்கள்!

க.சுதந்தினி, மல்லாவி.


*With Best Complements from*


# விபுலாநந்தா கல்லூரி
# VIPULANANDA COLLEGE

## மட்டுநகர் விபுலாநந்தா கல்லூரியில்...

- தரம்- 3 தொடக்கம் தரம்- 11 வரையிலான வகுப்புக்களுக்கான பாடங்கள் நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன.
- தரம்- 3 தொடக்கம் தரம்- 5 வரையிலான வகுப்புக்களுக்கு..........
  கணிதம், தமிழ்மொழி, சுற்றாடல் சார் செயற்பாடு,
  சிங்களம் மற்றும் ஆங்கிலம்
- தரம்- 6 தொடக்கம் தரம்- 11 வரையிலான வகுப்புக்களுக்கு..........
  தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்,
  தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், வரலாறு,
  சிங்களம், வர்த்தகம் மற்றும் நாடகமும்அரங்கியலும்..
- அத்தோடு க.பொ.த (உயர்தர) மாணவர் களுக்கான......
  விஞ்ஞான, கணிதப் பிரிவு, வர்த்தகப்பிரிவு,
  கலைப்பிரிவு, தொழில்நுட்பப் பிரிவு
- மட்டக்களப்பில் பல்லாயிரக்கணக்கான பட்டதாரிகளை உருவாக்கிய பெருமைக்குரியகல்வி நிறுவனமாக விபுலாநந்தா கல்லூரி சாதனை படைத்திருக்கிறது.







**மேலதிக விபரங்களுக்கு...**

**விபுலாநந்தா வெளிவாரி பட்டப்படிப்புக்கள் கல்லூரி,**
**அரசடி, மட்டக்களப்பு.**
**தொலைபேசி:-- 0767052829/0754352023**

AD/0001

எபெக்ஸ் அச்சகம்
மருதமுனை
0772271404/0777620260